**அரச சேவைகள் சேமலாப நிதியம் - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

அரச சேவைகள் சேமலாப நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களிற்கு உரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1942 இன் 18 இலக்க அரச சேவைகள் சேமலாப நிதிய கட்டளைகள் சட்டத்தின் (621 அதிகாரத்தின்) 24(1) பிரிவு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றை வழங்க போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயத்தை வெளியிடுகிறேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 43,650,259,791 ஆன திறைசேரி பிணை முறிகளுக்காக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு வட்டி வருமானம் ரூபா 1,309,507,797 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திறைசேரி பிணை முறிகளுக்கான வட்டி வருமானம் நிதியத்திற்குக் கிடைத்த பின்னர் காசு அடிப்படையில் கணக்கீடு மேற்கொள்ளப்படுகின்றது. | வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| ஆ) | மீளாய்வாண்டின் போது இரண்டு நிலையான வைப்புக்களுக்கு உரிய வட்டி வருமானம் ரூபா 27,669,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெற வேண்டிய அரசாங்க பங்களிப்புப் பணத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய பட்டோலைகள் கணக்காய்விற்காக | 221.0 | தனிப்பட்ட மீதிகளின் பட்டோலை | 2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது மேற்கொள்ளப்பட்ட புதிய திட்ட முறைமையின் பிரகாரம் அதன் பின்னர் எதிர்காலத்தில் இந்த மீதிகள் ஒவ்வொரு நிறுவனத்தின் பிரகாரமும் | மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்தக் கூடிய விதத்தில் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட வில்லை | | | உத்தியோகத்தர்களின் பிரகாரமும் இனங்காண முடியுமாக இருந்ததுடன் முன்பிருந்து கொண்டு வரப்படுகின்ற இந்த மீதிகள் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுவதுடன் குறைந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | ஒவ்வொரு பங்களிப்பாளரின் பிரகாரம் ஒதுக்கப்பட முடியுமான பிரகாரம் தனிப்பட்ட மீதிகளின் பட்டோலை சமர்ப்பிக்கப் படாமையினால் கட்டாய பங்களிப்பு பணக் கணக்கின் மீதி மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்புப் பண கணக்கின் மீதிகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட வில்லை. | 39,823.8<br>61,194.7 | தனிப்பட்ட மீதிகளின் பட்டோலை | தனிப்பட்ட மீதிகளின் பட்டோலை ஒன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | சுய பங்களிப்புக் கணக்கின் மீதி தொடர்பாக உரித்து பெறுபவர்களின் தகவல்களுடன் பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையா ல் அந்த மீதிகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட வில்லை. | 61.5 | உரித்து பெறுபவர்களின் தகவல்களுடன் பட்டோலை | நிதியம் ஒன்றாக பங்களிப்பாளர்களின் தனிப்பட்ட மீதி பட்டியல்களை வைத்தல் முக்கியமாக இருந்தமையால் இதுவரை காணப்படுகின்ற மீதிகளின் பிரகாரம் தீர்த்து வைத்து பகுப்பாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் காசோலை மூலம் நிறுவன மட்டத்தில் கிடைக்கின்ற பங்களிப்பு பண பகுப்பாய்வை உள்ளடக்கும் முறைமை ஒன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | தரவு முறைமை ஒன்று பேணிச் செல்வதன் மூலம் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 1989 ஆம் ஆண்டில் இருந்து முன்கொண்டு வரப்படுகின்ற சீராக்கல் கணக்கின் மீதிக்காக காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட வில்லை. | 5.6 | காலப் பகுப்பாய்வு | காலப் பகுப்பாய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது. | நிறுவன மட்டத்தில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 1942 இன் அரசாங்க சேவை சேமலாப நிதிய சட்டத்தின் 25 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்த பின்னர் ஓய்வூதிய பணிப்பாளரால் அந்த திகதியின் போது நிதியத்தின் தமது பெயரில் செலவு வைக்கப்பட்ட மொத்த தொகையின் அளவு ஒவ்வொரு பங்களிப்பாளருக்கும் அறிவிக்க வேண்டிய போதிலும் அந்த தேவையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,278.43 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 17,102.56 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகள் குறைவடைவதற்கு முதலீட்டு அடிப்படையிலான வட்டி வருமானம் ரூபா 3,824.13 மில்லியனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பங்களிப்பாளர்களுக்கு இடையே ரூபா 13,278,434,296 ஆன வட்டி வருமானத்தை பகுப்பாய்வு செய்வதற்காக ஆரம்ப மாதத்தில் ஒதுக்கீட்டுப் பெறுமதியில் சராசரிப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு விகிதாசாரம் தீர்மானிக்கப்பட்டதுடன் அதன் மூலம் வட்டி வருமானம் பங்களிப்பாளர்களுக்கிடையே முழுமையாக பகிர்ந்து செல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது ரூபா 5,074,001,808 ஆன வட்டி வருமானம் பங்களிப்பாளர்களுக்கு இடையே பகிர்ந்தளிக்காமல் பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை | முறையான அடிப்படை ஒன்று பின்பற்றப்படல் வேண்டும். |